Life of Christ
Tamil



# கிறிஸ்துவின் ஜீவியத்தில் முக்கியமானவை

## 5 இயேசு எமக்காக மரணிக்கிறார்

- இயேசுவுக்கு எதிராக ஓர் சூழ்ச்சி
- பஸ்காப் பண்டிகை
- இயேசு கெத்சமனேயில்
- இயேசுவின் விசாரணை
- இயேசு சிலுவையில் அறையப்பட்டமை

## இயேசுவுக்கு எதிராக ஓர் சூழ்ச்சி

இயேசு அவர்களது பாவங்களைக் கண்டித்துப் பேசியமையால் சமயத்தலைவர்கள் இயேசுவை வெறுத்தனர். அனேக ஜனங்கள் இயேசுவைப் பின்பற்றிய தன் நிமித்தம் சமயத்தலைவர்கள் எரிச்சல் அடைந்தனர். இயேசு அனேக வியாதியஸ்தர்களைக் குணப் படுத்தியதோடு, சில மரித்தோரையும் உயிர்த்தெழுப்பியிருந்தார். இயேசு மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினுர். ஆனுல் அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அவர்கள் இயேசுவைப் பிடித்து புரட்சிக்காரன் என்னும் குற்றச் சாட்டினுல் சிறையிலிட நினைத்தனர். எனினும் அவரைப் பின்பற்றிய ஜனங்களின் நிமித்தம் வெளியரங்கமாய் இதைச் செய்யப் பயந்தனர். ஆகவே இராத்திரியிலே தாங்கள் இதைச் செய்வதற்கு தங்களை வழிநடத்தும்படி இயேசுவின் சீஷனுகிய யூதாஸ் ஸ்காரியோத்துக்கு பணங் கொடுத்து அவனுதவியை நாடினர்.

**நீர் செய்ய வேண்டியது.**

1. இயேசுவின் எதிரிகளாய் இருந்தவர்கள் யார் ?
   (a) சாதாரண ஜனங்கள்.
   (b) சில சமயத்தலைவர்கள்.
   (c) உரோம அரசாங்க ஊழியர்கள்.

## பஸ்காப் பண்டிகை.

பஸ்காப் பண்டிகை, தேவன் தமது ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கினபோது கொண்டாடப்பட்டதாயிருந்தது. ஒவ்வொருவருடைய பாஸ்காவின் போது பாவபலியாக ஓர் ஆடு கொல்லப்பட்டது. இது இயேசுவின் மரணத்திற்கு அடையாளமாயிருந்தது. இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பத்திலே, யோவான்ஸ்நானன் இயேசுவைக் குறித்து ''உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டி'' என்று சாட்சி கொடுத்தான். இதைச் செய்யும்படியாக அவர் எமது பாவத் தண்டனைகளைத் தம்மேல் சுமந்து நமக்காக மரிக்க வேண்டியிருந்தது. இயேசு பஸ்காவின் ஆகாரத்தை சீஷருடன் புசித்தபின், யூதாஸ் அவரைக் காட்டிக் கொடுக்கும்படி புறப்பட்டான்.

© 1983. All Rights Reserved
International Correspondence Institute
Brussels, Belgium
D/1985/2145/15

**நீர் செய்ய வேண்டியது.**

2. யோவான் இயேசுவைக் குறித்து எப்படி சாட்சி கொடுத்தான்.

...(a) தேவ குமாரனாக.

...(b) பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டியாக.

...(c) வாக்குக் கொடுக்கப்பட்ட மேசியா-வாக.

## இயேசு கெத்சமனேயில்

### இயேசு ஜெபித்தல்,

யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறான் என்று இயேசு அறிந்திருந்தார். அவர் அவனிடத்தில் இருந்து தப்பியிருக்க முடியும், ஆனால் இவ்வுலகில் எமக்காக மரிக்கும்படியே அவர் வந்தார் அவர் தமது சீஷர்களுக்கு தமது சிலுவை மரணத்தையும், மூன்றாம் நாள் உயிர்தெழுவதையும் குறித்துக் கூறியிருந்தார். ஆகாரத்தின் பின் தாங்கள் அடிக்கடி ஜெபிக்கும்படி சென்ற கெத்சமனே தோட்டத்திற்கு அவர் சீஷர்களுடன் சென்றார்.

கெத்சமனே என்னும் இடத்திற்கு வந்த வேளையில் இயேசு சீஷரை நோக்கி நான் ஜெபிக்கும் வரை இங்கே தரித்திருங்கள் என்றார். பின் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரை அழைத்து "என் இருதயம் துக்கத்தால் அமிழ்ந்திருக்கின்றது. இங்கே விழித்திருங்கள்," என்றார். பின் அவர் மீண்டும் சிறுதூரம் சென்று நிலத்திலே வீழ்ந்து "என் பிதாவே உம்மால் சகலதும் கூடும். இப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல உம் சித்தப்படியே ஆகக் கடவது" என்றார். மாற்கு <u>14:32-36</u>.



ஒரு போதும் பாவம் அறியாத இயேசுவுக்கு சகலரது பாவங்களையும் சுமப்பது கடினமாய்க் காணப்பட்டது. ஆனாலும் அவர் எம்மைப் பாவத்திலிருந்து மீட்க விரும்பினார். எமக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பதற்கு வேறு வழியில்லாதமையால் இயேசு எமக்காக மரித்தார்.

**நீர் செய்ய வேண்டியது.**

3. ''என் சித்தமல்ல, உம் சித்தமே நிறைவேறட்டும்'' என்ற இயேசுவின் வார்த்தைகளை மனப்பாடம் செய்க.

**இயேசு பிடிக்கப்பட்டமை,**

இயேசு ஜெபித்தவேளையில் தேவதூதரால் பெலப்படுத்தப்பட்டார். வேளைவந்ததை காண்பிக்கும்படி நித்திரையடைந்திருந்த சீஷர்களை அவர் எழுப்பினார். அவரைப் பிடிக்கும்படி வந்தோரை யூதாஸ் வழிநடத்தினான்.

> பின்பு இயேசு தமக்கு விரோதமாய் வந்த பிரதான ஆசாரியர்களையும் தேவாலயத்துச் சேனைத் தலைவர்களையும் மூப்பர்களையும் நோக்கி ''ஒரு கள்ளனைப் பிடிக்கப்புறப்பட்டு வருகிறது போல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துப் புறப்பட்டு வந்தீர்களே. நான் தினந்தோறும் தேவாலயத்தில் உங்களுடனே கூட இருக்கையில் நீங்கள் என்னைப் பிடிக்கக் கை நீட்டவில்லை. .........'' அவர்கள் அவரைப் பிடித்தபின்பு, பிரதான ஆசாரியனுடைய வீட்டில் கொண்டு போய் விட்டார்கள்.
> லூக்கா 22:52-54.

**நீர் செய்ய வேண்டியது**

4. இயேசுவைக் காட்டிக் கொடுத்த சீஷன் யார் ?

## இயேசுவின் விசாரணை

இயேசு ஆறு முறை விசாரிக்கப்பட்டார்.

1. ஓய்வு பெற்ற பிரதான ஆசாரியன் ஒருவனுக்கு முன்பாக.
2. அக் காலத்துப் பிரதான ஆசாரியனுக்கு முன்பாக.
3. யூத அதிபதிகளுக்கு முன்பாக.
4. ரோம அதிகாரியாகிய பிலாத்துவிற்கு முன்பாக.
5. அயல் நாட்டுக்கு அதிகாரியாகிய ஏரோதிற்கு முன்பாக.
6. திரும்பவும் பிலாத்திற்கு முன்பாக.

பொழுது விடிந்தவுடனே, பிரதான ஆசாரியரும், மூப்பரும், வேதபாரகரும் ஆலோசனைச் சங்கத்தாரனைவரும் கூடி ஆலோசனை பண்ணி, இயேசுவைக் கட்டிக் கொண்டு போய், பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்.
மாற்கு 15:1.



இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், ராயருக்கு வரிகொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்.

பிலாத்து அவரை நோக்கி: "நீ யூதருடைய இராஜாவா? என்று கேட்டான். அவர் அவனுக்குப் பிரதியுத்தரமாக: "நீர் சொல்லுகிறபடிதான்" என்றார். லூக்கா 23:2,3.

இயேசு பிரதியுத்தரமாக: "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே ...............

மறுபடியும் பிலாத்து யூதர்களிடத்தில் வெளியே வந்து "நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன். பஸ்காப்பண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலை பண்ணுகிற வழக்கமுண்டே; ஆகையால் யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலை பண்ண உங்களுக்கு மனதுண்டா" என்றான். அவர்களோ மிகுந்த சத்தமாய் "எங்களுக்கு பரபாசை விடுதலையாக்கும்" என்று கூறினர். (பரபாஸ் என்பவன் ஓர் கொலைபாதகனாக இருந்தான்).
யோவான் 18:36-40.

பிலாத்து, பிரதான ஆசாரியர்கள் இயேசுவின் மேல் எரிச்சல் கொண்டதனாலேயே இப்படிச் செய்கின்றனர் என்றறிந்திருந்தான். ஆனால் பிரதான ஆசாரியர்கள் ஜனங்களைத் தூண்டிவிட்டு, பரபாசை விடுதலை செய்யுமாறு பிலாத்திடம் கேட்கச் செய்தனர்.

பிலாத்து மறுபடியும் ஜனங்களை நோக்கி "அப்படியானால், யூதருடைய ராஜாவென்று நீங்கள் சொல்லுகிறவனை நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டான். "அவனைச் சிலுவையில் அறையும்" என்று மறுபடியும் சத்தமிட்டுச் சொன்னார்கள். அதற்குப் பிலாத்து: ஏன், என்ன பொல்லாப்புச் செய்தான்" என்றான். அவர்களோ: "அவனைச் சிலுவையில் அறையும்" என்று மறுபடியும் சத்தமிட்டனர். பிலாத்து ஜனங்களைப் பிரியப்படுத்த விரும்பியதனால் பரபாசை விடுதலையாக்கி, இயேசுவை யோ வாரினால் அடிப்பித்து சிலுவையில் அறையப் படும்படி ஒப்புக்கொடுத்தான்.
மாற்கு 15:12-15.

நீர் செய்ய வேண்டியது.

5. எந்த அதிகாரி இயேசுவை விசாரித்தான்?

.....................................

6. அவ்வதிகாரி இயேசுவைக்குறித்து என்ன சொன்னான் ?

...(a) இவனைக் குற்றமுள்ளவனாகக் காண்கிறேன்.

...(b) தண்டனைக் கேதுவான குற்றம் ஒன்றையும் இவனில் காணேன்.

...(c) வழக்குத் தள்ளப்பட்டது.

## இயேசு சிலுவையில் அறையப்பட்டமை.

### தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின,

இயேசுவின் விசாரணையின்போது அவரது எதிரிகள் அவரைக்குறித்து பொய் சொன்னார்கள். போர்ச் சேவகர்கள் அவரைப் பரிகாசம் பண்ணி, துப்பி, வாரினால் அடித்தனர். இயேசு, இன்னும் இரு கொலைபாதகர்களுடன் தம் சிலுவைகளை சுமந்தவர்களாய் கல்வாரி மலையை நோக்கி நடத்திச் செல்லப்பட்டனர். பரிகாசம் பண்ணிய ஓர் கூட்டத்தின் மத்தியில், கால்களும், கரங்களும் சிலுவையில் அறையுண்டவராய் தொங்கினார். அவர் அவரைச் சுற்றி நின்ற யாவரின் பாவங்களுக்காகவும், அவர்களை எதிர்நோக்கியிருந்த ஆக்கினையை தம்மேல் சுமந்த தேவகுமாரனாயிருந்தார். அவரால் பரலோகத்திலிருந்து அக்கினியை வரப்பண்ணி அவர்கள் யாவரையும் சுட்டெரித்திருக்க முடியும், ஆனால் அவர் ''பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்'' என்று அவர்களுக்காக ஜெபம் பண்ணினார்.



''ஜனங்களின் பாவங்களுக்காக மேசியா மரிப்பார்'' என்று ஏசாயா தீர்க்கதரிசி எழுதியிருந்தான்

> ''நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம் மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மே

விழப்பண்ணினார். ......... இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; ......... ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். ஏசாயா 53:5-8.

வேறு தீர்க்கதரிசிகளும் அவர் தமது சீஷனால் காட்டிக்கொடுக்கப்படுவார் என்றும், அவரது கரங்கள் துளைக்கப்பட்டும், பரிகாசம் பண்ணப்பட்டும் காடியைக் குடிக்கப் பெற்றும் மரிப்பார் என்றும் அவரது உடையின் மேல் சீட்டுப் போடுவார்கள் என்றும் கூறினர்.

**நீர் செய்ய வேண்டியது.**

ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை மூன்று தரம் வாசிக்கவும்.

**இயேசுவின் மரணம்,**



இயேசுவின் மரணத்தைப் பார்த்துக்கொண்டிருந்த யாவரும் அவரைப் பரிகாசம் பண்ணவில்லை. அவரோடு சிலுவையில் தொங்கிய கள்வர்களில் ஒருவன் அவரை விசுவாசித்து, தனது பாவங்களிலிருந்து உடனடியாக இரட்சிக்கப்பட்டான்.

அவன் இயேசுவை நோக்கி, ''ஆண்டவரே நீர் இராஜாவாக வருகின்றபொழுது என்னை நினைத்தருளும்'' என்றான். அதற்கு அவர் ''இன்று என்னுடனே கூட நீ பரதீசிலிருப்பாய்' என்றார். லூக்கா 23:42,43.

அப்பொழுது ஏறக்குறைய ஆறும் மணி நேரமாயிருந்தது; ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று. சூரியன் இருளடைந்தது, தேவாலயத்தின் திரைச்சீலை நடுவில் இரண்டாகக் கிழிந்தது. இயேசு, ''பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்'' என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொல்லி ஜீவனை விட்டார். லூக்கா 23:44-46.

நூற்றுக்கு அதிபதியும், அவனோடே கூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: ''மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்'' என்றார்கள். மத்தேயு 27:54.

## நீர் செய்ய வேண்டியது.

8. இடைவெளிகளில் உமது பெயரை எழுதவும்.

இயேசு சிலுவையிலே ............... டைய பாவங்களுக்காக மரித்தார். அவர் .................. பெற்றிருக்க வேண்டிய தண்டனையைத் தான் ஏற்றுக் கொண்டார் ஏனெனில் ...............இரட்சிக்கப்பட்டு, நித்திய ஜீவனைப் பெற வேண்டும் என்பதற்காக............ இடத்தை எடுக்கும்படி உமது குமாரனை அனுப்பியதற்காகத் தேவனே உமக்கு நன்றி.

## வாழ்த்துக்கள்.

இப்பாடத் தொகுதியை நீர் முடிக்க இன்னும் ஒரு பாகமுண்டு. அதன்பின் நீர் ஓர் சான்றிதழைப் பெறுவீர். இப்பாகம் எமது கையில் கிடைத்ததும், உமக்கு 6ம் பாகத்தை அனுப்பி வைப்போம்.

உமது பெயர் ..................................

விலாசம் ........................................

..........................................

வயது ........................................

சமயம் ................................

ICI Nearest Centre
ICI UNIVERSITY
1ST FLOOR, 1/62/14 RAVI COLONY, ST. THOMAS MOUNT, CHENNAI - 600016
PHONE : +91-44-4351 9774
Email : iciuniversitymdrs@gmail.com